**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.109/2011**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 24.10.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name : திரு. பாலுசாமி Father's Name : முத்து

Village : அம்மம்பாளையம் Taluk : ஆத்தூர்

Calling : விவசாயம் Age : 60

துவக்க நேரம் :11.07 P.M

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:-**

1) நான் ஏற்கனவே என் தரப்பில் எழுத்துமூல சாட்சியம் தாக்கல் செய்து 2 ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்துள்ளேன். தற்பொழுது மேலும் பின்வரும் ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | ஆவணம் | தன்மை |
|---|---|---|
| 1. | பசலி 1433-க்கான அடங்கல் (சான்றிட்ட நகல்) | **பி.வா.சா.ஆ.3** |
| 2. | அடங்கல் கணக்கில் உள்ள சர்வே எண்களுக்கான அனுபவச்சான்று | **பி.வா.சா.ஆ.4** |

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 109/2011, Dt.24.10.2024.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) தாவா சொத்தின் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுதுதான் 3-ம் பிரதிவாதி பொன்னுசாமியிடம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அதனால்தான் வாதிகள் என்னையும், எனது மகனையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்த்த பிறகு நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) 1-ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவர் 3-ம் பிரதிவாதி பொன்னுசாமிக்கு நான் வாங்கிய சொத்து விற்பனை செய்தவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி ஜெயக்குமார் தாக்கல் செய்த பதிலுரையின் அடிப்படையில்தான் இந்த நிரூபண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் அவர் எந்த தகவல்களை சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நானும், எனது மகனும் முன்னிலையாகாததால் எங்களை தோன்றா தரப்பினராக இவ்வழக்கில் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பில் CPC Or.9 R7 மனு தாக்கல் செய்து சாட்சியை மீண்டும் வழக்கில் சேர்க்க வேண்டுமென்றும் எனவே, குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க வேண்டப்பட்டது. பரிசீலிக்கையில் சரியான முடிவை இவ்வழக்கில் எடுப்பதற்கு சாட்சியை மீண்டும் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 11.34 A.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/- S. Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 109/2011, Dt.24.10.2024.